
**அக்டோபர் – 20**

# TNPSC துளிகள்

- 22 மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு ஆசிரியர் அல்லாத ஊழியர்களை நியமிக்க தமிழ்நாடு அரசுப் பணியாளர் ஆணையத்தை அனுமதிக்கச் செய்வதற்காக, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் ஆணையம் ஆனது (கூடுதல் செயல்பாடுகள்) சட்டத்தினை திருத்துவதற்கான புதிய மசோதாவானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- IN–RoKN எனப்படும் முதல் இந்திய-தென் கொரிய இருதரப்புக் கடற்படை பயிற்சியானது தென் கொரியாவின் பூசன் கடற்படை தளத்தில் தொடங்கியது.
- மத்தியப் புலனாய்வுப் பிரிவு (CBI) ஆனது, சக்ரா-V நடவடிக்கையின் கீழ் பன்னாட்டு இணையவெளி மோசடி வழக்கில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா முழுவதும் மூன்று நபர்களை கைது செய்தது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கிராமப்புற சிறப்பு அதிகாரிகளுக்கான பதவிக்கால நீட்டிப்பு




- தமிழ்நாடு அரசானது, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தினைத் திருத்துவதற்கான மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மசோதா கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சிறப்பு அதிகாரிகளின் பதவிக் காலத்தை 2026 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் தேதி வரை நீட்டிக்க முயல்கிறது.
- சிறப்பு அதிகாரிகளின் தற்போதைய பதவிக் காலம் ஆனது ஏற்கனவே 2025 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் தேதி வரையில் ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் நீட்டிக்கப் பட்டது.
- இந்த நீட்டிப்பு 28 மாவட்டங்களில் உள்ள 9,624 கிராமப் பஞ்சாயத்துகள், 314 பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்டப் பஞ்சாயத்துகளுக்குப் பொருந்தும்.
- தொகுதி மேம்பாட்டு அதிகாரிகள் (கிராமப் பஞ்சாயத்துகள்) கிராமப் பஞ்சாயத்துகளுக்கான சிறப்பு அதிகாரிகளாக செயல்படுகின்றனர்.

- உதவி இயக்குநர்கள் (பஞ்சாயத்துகள் அல்லது தணிக்கை) பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கான சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள்.
- கூடுதல் இயக்குநர்கள், கூடுதல் ஆட்சியர்கள், இணை இயக்குநர்கள் அல்லது திட்ட இயக்குநர்கள் மாவட்டப் பஞ்சாயத்துகளுக்கான சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப் படுகிறார்கள்.
- 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி முதல், திருவண்ணாமலை, காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் நகராட்சி மன்றங்கள் மாநகராட்சிக் கழகங்களாக மாற்றப்பட்டன.
- கிராமப் பஞ்சாயத்துகளை இந்த மாநகராட்சிகளுடன் இணைப்பது பாதிக்கப்பட்டப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் மாவட்டங்களில் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கிறது.
- பஞ்சாயத்துகளின் குறைப்பு ஒட்டு மொத்த தொகுதி மறுசீரமைப்புச் செயல்பாட்டில் பிரதிபலிக்கும்.
- தொகுதி மறுசீரமைப்பு செயல்முறை முடிந்த பின்னரே கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த முடியும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## தமிழ்நாடு சித்த மசோதா 2025

- தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழக மசோதா, 2025 குறித்த ஆளுநரின் கருத்துக்களை நிராகரித்து தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தக் கருத்துக்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் சட்டமன்றத்தின் நடைமுறை விதிகளுக்கும் எதிரானவை என்று முதல்வர் கூறினார்.
- இந்த மசோதா நிதி மசோதா வகையின் கீழ் வருவதாகவும், அரசியலமைப்பின் 207(3)வது சரத்தின் கீழ் ஆளுநரின் பரிந்துரை தேவை என்றும் முதல்வர் கூறினார்.
- இந்த வரைவு மசோதாவானது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் தயாரிக்கப் பட்டு, சட்டத்துறை மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தினால் ஆய்வு செய்யப்பட்டது.
- இந்த மசோதா ஆளுநருக்கு அனுப்பப்பட்டாலும், அரசியலமைப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட விதிகள் குறித்த கருத்துக்களை அவர் இதில் வெளிப்படுத்தினார்.
- மசோதாவின் பரிசீலனை கட்டத்தில் திருத்தங்களைப் பரிந்துரைக்கச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்று முதலமைச்சர் கூறினார்.
- அரசியலமைப்பிற்கு எதிரானது என்று கூறப்பட்ட 'பரிசீலனை' என்பதற்குப் பதிலாக ஆளுநர் 'பொருத்தமான பரிசீலனை' என்ற சொல்லினைப் பயன்படுத்தினார்.
- ஆளுநரின் கருத்துகளை அவையால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.
- இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதியில் பயிற்றுவிப்பு மற்றும் பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகமானது சென்னையில் நிறுவப் படும்.
- அந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக முதல்வர் செயல்படுவார் என்பதோடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அதன் துணைவேந்தராக இருப்பார்.
- ஒரு குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட குழுவிலிருந்து

துணை வேந்தரை வேந்தர் நியமிப்பார்.

- இந்தக் குழுவில் வேந்தரின் பரிந்துரையாளர், அரசாங்கத்தின் பரிந்துரையாளர் மற்றும் மேலவையின் பரிந்துரையாளர் ஆகியோர் இடம் பெறுவார்கள் என்பதோடு அவர்கள் அனைவரும் குறிப்பிட்ட துறையில் புகழ்பெற்ற நபர்களாக இருப்பர்.
- துணைவேந்தர் மூன்று ஆண்டுகள் அல்லது எழுபது வயது வரையில், இவற்றில் எது முந்தையதோ அதுவரை அப்பதவியில் இருப்பார்.




## தனியார் பல்கலைக்கழகங்கள் திருத்த மசோதா

- தமிழ்நாடு சட்டமன்றமானது 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக் கழகங்கள் (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- தற்போதுள்ள தனியார் அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளை 'ஏற்கனவே உள்ள கல்லூரிகளை (பிரவுன்ஃபீல்ட்) பல்கலைக்கழகங்கள்' என்ற புதிய நிறுவனமாக மாற்ற இது அனுமதிக்கும்.
- அத்தகைய வசதியை நிறுவுவதற்கு அருகிலுள்ள நிலத்திற்கான குறைந்தபட்சத் தேவையை மாற்றுவதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவு ஆனது, மாநிலத்தில் தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவ குறைந்தபட்சம் 100 ஏக்கர் அளவிலான தொடர்ச்சியான நிலம் தேவை என்று குறிப்பிடுகிறது.
- 2025 ஆம் ஆண்டு திருத்தம் ஆனது, பிரவுன் ஃபீல்ட் பல்கலைக்கழகங்களுக்கான குறைந்த பட்ச நில அளவை நகராட்சிப் பகுதிகளில் 25 ஏக்கராகவும், நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சிப் பகுதிகளில் 35 ஏக்கராகவும், பிற பகுதிகளில் 50 ஏக்கராகவும் குறைத்துள்ளது.
- சிறுபான்மை அல்லாத அனைத்து தனியார் பல்கலைக்கழகங்களிலும் மருத்துவம், பல் மருத்துவம், அதனுடன் தொடர்புடைய சுகாதாரம் மற்றும் இந்திய மருத்துவப் படிப்புகளில் 65 சதவீத இடங்களை அரசு இடங்களாக ஒதுக்கும் புதிய பிரிவும் சேர்க்கப் பட்டது.
- சிறுபான்மை தனியார் பல்கலைக்கழகங்களுக்குப் பாதி இடங்கள் அரசு இடங்களாக ஒதுக்கப்படும்.

❖ உதவி பெறும் கல்லூரிகள் தனியார் பல்கலைக் கழகங்களாக மாற்றப்பட்டால், அவை உதவி பெறும் அந்தஸ்தை இழந்து, அரசு மானியம் பெறுவது நிறுத்தப் படும்.




# தேசியச் செய்திகள்

## ஜல் ஜீவன் திட்டம் குறித்த புதிய தகவல்




❖ ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 15.71 கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புற வீடுகளுக்கு (80 சதவீதத்திற்கும் அதிகமான கிராமப்புற வீடுகளில்) குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

❖ இந்தத் திட்டமானது, ஒவ்வொரு வீட்டிற்கும் நிலைத் தன்மை, செயல்பாடு மற்றும் நம்பகமான குடிநீர் சேவை வழங்கலில் கவனம் செலுத்துகிறது.

❖ மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் சக கற்றலை ஊக்குவிப்பதற்காக "பெய்ஜல் சம்வாத்" என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

❖ ஜல் ஜீவன் திட்டமானது, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் குடிநீர்

குழாய் இணைப்பு வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.

### 7வது NSG மையம்

- 7வது தேசிய பாதுகாப்பு காவல்படையின் (NSG) மையம் ஆனது இராமர் கோயிலுக்கு அருகில் உள்ள அயோத்தியில் அமைக்கப்பட உள்ளது.
- இந்த மையமானது, NSG படை வீரர்கள் இப்பகுதியில் 24 மணி நேரமும் காத்திருப்புடன் இருக்க உதவும்.
- தற்போது மும்பை, சென்னை, கொல்கத்தா, ஐதராபாத், அகமதாபாத் மற்றும் ஜம்முவில் என ஆறு NSG மையங்கள் அமைந்துள்ளன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### வனப் பிரகடன மதிப்பீடு 2025


- இந்த அறிக்கையானது வனப் பிரகடன மதிப்பீட்டுக் கூட்டணியால் வெளியிடப்பட்டது.
- கிளாஸ்கோவில் நடைபெற்ற 26வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP26) 2030 ஆம் ஆண்டிற்குள் காடழிப்பு மற்றும் வனச் சீரழிவை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், உலகளாவிய காடழிப்பு விகிதங்கள் ஆபத்தான அளவில் அதிகமாகவே உள்ளன.
- 2024 ஆம் ஆண்டில், உலக நாடுகளில் பெரும்பாலும் வெப்ப மண்டலத்தில் 8.1 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலான, அதாவது ஆஸ்திரியாவின் அளவிலான காடுகள் இழக்கப் பட்டன.
- கால்நடை வளர்ப்பு மற்றும் ஒற்றை வகை பயிர் தோட்டங்கள் உள்ளிட்ட வேளாண்மை நடவடிக்கையானது, கடந்த பத்தாண்டுகளில் உலகளாவிய காடழிப்பில் சுமார் 86% பங்கினைக் கொண்டுள்ளது.
- வன இழப்புக்குப் பங்களிக்கும் வேளாண் மானியங்களுக்காக ஆண்டுதோறும் செலவிடப் படும் 409 பில்லியன் டாலரில் வங்களின் வளங்காப்பிற்கான பொது நிதி

1.4% மட்டுமேயாகும்.

- சரக்குப் பொருட்களின் பயன்பாட்டின் காரணமாக இயக்கப்படும் காடழிப்பு அபாயங்களை ஏற்படுத்தும் நிதி நிறுவனங்களில் 40% மட்டுமே இந்த அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும் நிர்வகிப்பதற்குமான கொள்கைகளைச் செயல்படுத்தி உள்ளன.




## இந்தியப் பறவை இனங்களின் அழிவதற்கான ஆபத்து





- IUCN செந்நிறப் பட்டியல் ஆனது அபுதாபி, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள நான்கு இந்தியப் பறவை இனங்களின் அழிவு அபாயம் குறித்த தகவல்களைப் புதுப்பித்து உள்ளது.
- கல் குருவி, பனங்காடை, கருஞ்சிவப்பு வால் வானம்பாடி மற்றும் நீளவாய் கதிர்க் குருவி உள்ளிட்ட நான்கு பறவைகளும் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம் மற்றும் அருகி வரும் நிலையில் உள்ள இனம் போன்ற அதிக அச்சுறுத்தல் வகைகளுக்கு மாற்றப்பட்டன.
- இந்த நான்கு இனங்களும் புல்வெளிகள், பகுதியளவு வறண்ட நிலப்பரப்புகள், பாலைவனங்கள், பயிர் நிலங்கள், மலைப்பாங்கான புதர்க் காடுகள் மற்றும் தரிசு நிலங்கள் போன்ற திறந்த வெளி இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சார்ந்து உள்ளன.
- IUCN செந்நிறப் பட்டியலில் தற்போது உலகளவில் 172,620 இனங்கள் உள்ளன என்ற ஒரு நிலையில் அவற்றில் 48,646 இனங்கள் அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கை 2025

- சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது 2025–26 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் (GDP) கணிப்பை 6.6 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அதன் முந்தைய கணிப்பை விட 20 அடிப்படைப் புள்ளிகள் அதிகமாகும்.
- IMF ஆனது 2026–27 ஆம் ஆண்டிற்கான அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீட்டை 6.2 சதவீதமாகக் குறைத்துள்ளது என்பதோடு இது முந்தைய கணிப்பை விட 20 அடிப்படைப் புள்ளிகள் குறைவாகும்.
- அமெரிக்காவிற்கான இந்தியாவின் ஏற்றுமதிக்கான பயன் திறன்/பயனுள்ள வரி விகிதம் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 35.8 சதவீதத்தை எட்டியது.
- ரஷ்யாவின் எண்ணெயை இந்தியா வாங்கியதால் இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா 25 சதவீத கூடுதல் வரி விதித்ததைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.





## உலகளாவியப் பட்டினிக் குறியீடு 2025

- 136 நாடுகளை மதிப்பீடு செய்த 2025 ஆம் ஆண்டு உலகளாவியப் பட்டினிக் குறியீட்டு (GHI) அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- தற்போதைய வேகத்தில் குறைந்தது 56 நாடுகள் ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்ச பட்டினி வரம்பை இழக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் 19.0 ஆக இருந்த உலகளாவிய GHI மதிப்பெண் 2025 ஆம் ஆண்டில் 18.3 ஆக உள்ளதுடன் 'மிதமான' என்ற பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.
- புருண்டி, காங்கோ ஜனநாயக குடியரசு, ஹைத்தி, மடகாஸ்கர், சோமாலியா, தெற்கு சூடான் மற்றும் ஏமன் ஆகிய ஏழு நாடுகளில் பட்டினி நிலையானது 'ஆபத்தான' மட்டத்தில் உள்ளது.
- 27 நாடுகளில் 2016 ஆம் ஆண்டிலிருந்து பட்டினி நிலை அதிகரித்து வருவதுடன், 35 நாடுகளில் பட்டினி நிலை 'தீவிரமானது' என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- பிஜி, ஜோர்டான், லிபியா, சாலமன் தீவுகள் மற்றும் சிரியா ஆகிய ஐந்து நாடுகள் 2000 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் மோசமான GHI மதிப்பெண்களைப் பெற்று


உள்ளன.

- ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ ஜனநாயகக் குடியரசு, லைபீரியா, மடகாஸ்கர், கென்யா, சோமாலியா மற்றும் சாம்பியா ஆகிய ஆறு நாடுகள் மிகவும் ஆபத்தான பட்டினி நிலையைக் கொண்டுள்ளன.
- தஜிகிஸ்தான், மொசாம்பிக், ருவாண்டா, சோமாலியா, டோகோ மற்றும் உகாண்டா போன்ற நாடுகளில் பட்டினி நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
- இந்தியா, வங்காள தேசம், எத்தியோப்பியா, நேபாளம் மற்றும் சியரா லியோனி ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், இலக்கு வைக்கப்பட்ட கொள்கைகள் பட்டினி நிலையைக் குறைக்கும் என்பதைக் காட்டுகின்றன.
- GHI ஆனது ஊட்டச்சத்து குறைபாடு, குழந்தை வளர்ச்சி குறைபாடு, குழந்தை எடை இழப்பு (வயதிற்கேற்ற எடையில்லாமல் இருத்தல்) மற்றும் குழந்தை இறப்பு ஆகிய நான்கு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது கன்சர்ன் வேர்ல்டுவைட் (அயர்லாந்து), வெல்துங்கர்ஹில்ஃப் (ஜெர்மனி) மற்றும் சர்வதேச அமைதி மற்றும் ஆயுத மோதல் சட்டம் (IFHV) ஆகியவற்றால் வெளியிடப் படுகிறது.




# முக்கிய தினங்கள்

## உலக மூட்டழற்சி தினம் 2025 - அக்டோபர் 12



- இது அறிகுறிகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மேலும் சிக்கல்களைத் தடுக்க ஆரம்பகால நோயறிதலின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்குக் கற்பிப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விழிப்புணர்வுகளில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும் உலகளவில் பாதிக்கப் பட்டச் சமூகங்களை ஆதரிப்பதற்கும் இது முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் சர்வதேச மூட்டழற்சி மற்றும் முடக்குவாத நோய் அமைப்பினால் (ARI) நிறுவப்பட்டது.
- மூட்டழற்சி ஆனது மூட்டுகள் மற்றும் இணைப்புத் திசுக்களைப் பாதிக்கிறது என்பதோடு இதனால் வலி மற்றும் விறைப்பு நிலை ஏற்படுகிறது என்ற நிலையில் இதில் கீல்வாதம் மற்றும் முடக்கு வாதம் உட்பட 100க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Achieve Your Dreams" என்பதாகும்.

## பேரிடர் அபாயக் குறைப்புக்கான சர்வதேச தினம் 2025 - அக்டோபர் 13

- பேரிடர் அபாயங்களைக் குறைப்பதில் குடிமக்கள் மற்றும் அரசாங்கங்கள் தீவிரமாக பங்கேற்க ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- உலகளாவிய இடர் விழிப்புணர்வு மற்றும் பேரிடர் குறைப்புக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான UNGA அழைப்பைத் தொடர்ந்து இந்த நாள் 1989 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Fund Resilience, Not Disasters" என்பதாகும்.





## உலகத் தரநிலைகள் தினம் 2025 - அக்டோபர் 14

- உலகளவில் புதுமை, வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் நிலையான மேம்பாட்டினை மேம்படுத்துவதில் தரநிலைகளின் பங்கை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நம்பகமான அமைப்புகள், நியாயமான வர்த்தகம், தொழில்நுட்ப இணக்கத்தன்மை மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரலுக்குத் தர நிலைகள் அடித்தளமாக உள்ளன.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Shared Vision for a Better World Spotlight on SDG 17 – Partnerships for the Goals" என்பதாகும்.




## உலக மாணாக்கர் தினம் 2025 - அக்டோபர் 15




- டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளையும், மாணாக்கர் அதிகாரமளித்தல் மற்றும் கல்விக்கான அவரது வாழ்நாள் அர்ப்பணிப்பையும் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இது "உலக மாணாக்கர் தினம்" என்று பெயரிடப்பட்டாலும், இந்த நாளுக்கு இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் எந்த அங்கீகாரமும் இல்லை.
- 2002 முதல் 2007 ஆம் ஆண்டு வரை, கலாம் அவர்கள் இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார்.
- தனது பதவிக் காலத்திற்கு பிறகு, 2015 ஆம் ஆண்டில் அவர் இறக்கும் வரை மாணாக்கர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Empowering Students as Agents of Innovation and Change" என்பதாகும்.

## உலக கருச்சிதைவு மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பு நினைவு தினம் 2025 - அக்டோபர் 15

- கருச்சிதைவு மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், எதிர்கால இழப்புகளைக் குறைக்க கல்வி மற்றும் தடுப்பு பராமரிப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றினை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினத்தின் அனுசரிப்பு ஆனது, 2002 ஆம் ஆண்டு ராபின் பியர், லிசா பிரவுன் மற்றும் டாமி நோவக் ஆகியோரால் ஒரு மனு மூலம் தொடங்கப்பட்டது.
- இது 2006 ஆம் ஆண்டு அமெரிக்க பிரதிநிதிகள் சபையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.
- உலகளவில், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2 மில்லியன் குழந்தைகள் இறந்து பிறக்கச் செய்ன்றன என்ற நிலையில் அதில் பல காரணங்கள் தடுக்கக் கூடியவையாக இருந்தாலும் கூட சுமார் 26% வரையிலான கர்ப்பங்கள் கருச்சிதைவு அல்லது பச்சிளம் குழந்தை இறப்பில் முடிகின்றன.
- கருச்சிதைவு சார்ந்த ஆபத்து ஆனது 8.9% (வயது 20 முதல் 30) சதவீதத்திலிருந்து 74.7% (வயது 40+) என தாயின் வயதைப் பொறுத்து அதிகரிக்கிறது என்பதோடு மேலும் முந்தைய கருச்சிதைவு நிகழ்வுகளும் எதிர்கால இழப்பு அபாயங்களை மேலும் அதிகரிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★